1156

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு- சான்[illegible] இதழ்

ஆசிரியர்: இளவழகனார்

கிளை-7 குந்தலம், மாம்பாக்கம்; மன்மத ஆடி ௨௰ 5-8-55 தளிர்-44

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - SEP 1955
MADRAS

1156
3-55

திருவள்ளுவர் மலர்

குருகுலத்தின் குறிக்கோள்

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

ஒழுக்கமும் இழுக்கமும்

பகலவன் மறைந்தால் மாலையில் இருள் கவிவது இயல்பு. இருள் கழிய வேண்டுமானல் மீண்டும் பகலவன் தோன்றவேண்டும்.

இருளும் ஒளியும் ஒன்று இருக்குமிடத்தில் ஒன்று இராது; ஆயினும், இருள் இருக்குமிடத்தில் ஒளி சென்று அதனைத் துரத்தும். ஆனல், ஒளி இருக்குமிடத்தில் இருள் செல்லவோ அதனைத் துரத்தவோ ஆற்றல் உடையதன்று. ஒளி குறையும் நேரமும் இடமும் பார்த்துப் பதுங்கிப் பதுங்கி இருள் தாவிக் கொள்ளும். அதனல், ஒளிதான் நேர்மையும் ஆற்றலும் உடையது என்பதும், இருள் கள்ளமும் வலிவின்மையும் உடையது என்பதும் தெளியப்படும்.

வாழ்க்கையில் நன்மையும் தீமையும் ஒளியையும் இருளையும் போன்றவை. நல்லுணர்வு நன்னடத்தை நற்செயல் போன்ற நன்மைகளெல்லாம் மிகவும் ஆற்றல் வாய்ந்தவை. தீய உணர்வு தீய நடத்தை தீய செய்கை போன்ற தீமைகளெல்லாம் ஆற்றல் குறைந்தவை. நன்மையை அறம் என்பதும் தீமையை மறம் என்பதும் வழக்கு. நலங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்தலை ஒழுக்கம் என்றும், அதிலிருந்து வழுவுதலை இழுக்கம் என்றும் சொல்லுவர்.

ஒளியைப் போன்ற ஆற்றல் உடையது ஒழுக்கம்; அது குறையும்போது இருளை ஒத்த தீமைகளை, நேரம் பார்த்துக்கொண்டேயிருந்து மனிதரைக் கவ்விக்கொள்கின்றது. தீமைக்கு நாம் முயலவேண்டுமென்பதில்லை; அதுவே நம்மைக் கவ்விக் கொள்ளும்; 'நன்மை கடைப்பிடி' என்றபடி நலங்களைத்தான் நாம் முயன்று பற்றி அவற்றை இழக்காமலும் இருக்கவேண்டும். ஆதலால், ஏதம் கவ்விவிடுமே என்று 'ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்'

இன்னது குறைந்தால் இன்னது பரவுமே என்னும் இயல்பைத் தெளிந்திருப்பது வாழ்க்கையை உரிய நெறியில் நடத்துவதற்கு எவ்வளவு ஊக்கம் உண்டாக்குகின்றது! தெளியாதார்க்கு அவ்வூக்கம் ஏது?

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்,
இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து--ஒழுக்கத்தின் தவற்றால் குற்றம் உண்டாதல் அறிந்து, ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் -- அக வலிமையுடையோர் ஒழுக்க நடையில் தளரார்.

கால வேறுபாட்டால் பொருள் முதலியவற்றிற் சுருங்கினும் உணர்ச்சி வலியுடையோர் ஒழுக்கத்திற் சுருங்காராதலின் 'ஒழுக்கததின் ஒல்கார்' என்றும், ஒல்லும் அளவும் ஒழுக்கத்தைக் காக்கும் ஊக்கத்தினின்று அறிஞர் நெகிழாராகலின் 'ஒல்கார்' என்றும், ஒழுக்கச் சிறப்பு உணர்ச்சி வலிமையால் வாய்வதாதலின் அச்சிறப்புடையாரை 'உரவோர்' என்றும் விதந்தார். இழுக்கம் என்றது ஒழுக்கத்தினின்றும் வழுவுதலை; தன் விளைவுக்குக் காரணமான குற்றம் 'ஏதம்' எனப்பட்டது. படுபாக்கு-- படுதல், அதாவது உண்டாதல்.

ஒளியில்லாத இடத்தில் இருள் கவிதல் போல நன்னடத்தையில்லாத இடத்தில் தீய குற்றங்கள் படர்தல் இயல்பாதலின் அது தெரிந்து தக்கோர், தம் நடத்தையைக் காத்து வருவர் என்றபடி.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	மன்மத, ஆடி,	தளிர்
7	5-8-55 வெள்ளி.	44

திருக்குறள் திருநாள்

தமிழகத்திலே இன்று தலைசிறந்து நிற்கும் நூல்களில் தலைமைபெற்றது குறள். இவ்வழியாக் குறளோவியத்தை ஆக்கித் தந்த பெருமான் வள்ளுவனார். இன்று தமிழகத்தில் வள்ளுவனாரைப் போற்றாத வாய் இல்லை. அவரைப் பற்றி அறியாதார் அறியாதாரே.

அன்னாரைப்பற்றிய வரலாறுகள் பல தமிழகத்தில் நிலவிவருகின்றன. அவையாவும் அறுதியிட்டுக்கூறுவன வல்ல. ஐயப்பாட்டுடனே புகல்கின்றன. பிறந்த இடமும் காலமும் ஐயப்பாட்டுடனேயே இன்னும் இருக்கின்றன.

இச் சூழ்நிலையில், வையம் போற்றும் வான் குறளாகிய வள்ளுவனாரை வழுத்தும்காலொன்று அமைத்தல் கட்டாயமாகிவிட்டது. அவரைப் போற்றிப் பாராட்டி வழிபட வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரிகின்றது.

ஒரு குறித்த நாளிலே விழாக் கொண்டாடுவது பொருத்தமாயிருக்கும். அனைவருக்கும் நலம் பயக்கும் வகையிலே, வள்ளுவர் விழாவினை ஆண்டில் ஒரு குறிப்பிட்ட திங்களில் கொண்டாடுதல் மிகவும் இன்றியமையாதது. இக் குறிப்பிட்ட நன்னாள், வைகாசித் திங்களில் (ஜூன் திங்கள்) அனைவருக்கும் நலம் பயக்கும் வகையிலே அமைந்திருக்கிறது. என்று கருதுகிறோம்; வசதிக்கும் 'வைகாசி அநுடம்' என்னும் திருவள்ளுவர் திருநாள் மரபுக்கும் ஏற்றது.

பள்ளிக்கூடம் திறந்தவுடன் துள்ளியோடும் சிறார்கட்கும் மகிழ்வு பயக்கும்; கல்லூரிமாணவர்கட்கும் அக்காலம் விடுமுறையின் கடைசி காலமாய் இருக்கும். கல்லூரி மாணவர்கள் தத்தம் ஊர்களிலும் அல்லது கல்லூரியிடங்களிலும் திரண்டு வள்ளுவர் விழா (திருக்குறள் வாரம்) கொண்டாடிக்கொண்டு கிளர்ச்சியுடன் கல்லூரி வாழ்வைத் தொடங்கலாம். அதற்குரிய திங்களாய் வைகாசித்திங்களின்பிற்பகுதி (ஜூன் முற்பகுதி) அமைந்திருக்கிறது. திருமணம் அதிகமாய் நடைபெறும் இன்பத் திங்களும் அதுதானே!

எனவே அனைவருக்கும் உகந்ததாய் அமைந்திருக்கும் வைகாசித் திங்களின் கடைசிவாரத்தில் வள்ளுவர் திருநாளை வகையாய்க் கொண்டாடுவோம்,

திருவள்ளுவர் திருநாளைத் திக்கெட்டும் வாழும் தமிழர்கள், பெருநாளாய்க் கொண்டாடுவார்களாக.

வாழ்க வள்ளுவர்!
வளர்க வள்ளுவம்.

—T. N. அருச்சுனன்.

திருக்குறள் வாரம்

தமிழகம் வள்ளுவர் நாளை குறள் கிழமையாகவே (ஒருவாரம்) கொண்டாடலாம். விழாவினை விரிவாக நடத்த விழைவாரும், அந்நாட்களிலே இயலாதாரும் அதன்பின் மூன்று நாட்களிலும் விழா நடத்தலாம். பேரூர்களிலும் அதன் பல பகுதிகளிலும் பல நாட்கள் தொடர்ந்தும் சிற்றூர்களில் ஓரிரு நாட்களிலும் விழாக் கொண்டாடலாம்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தமிழ்க் கழகங்களிலும் கலைமன்றங்களிலும் கட்சி அமைப்புக்களாலும், பொது நிலையங்களாலும், திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட வேண்டும்.

இளையர்முதல் முதியர்வரை, ஆடவரும் பெண்டிரும், ஆசிரியரும், மாணவரும், வணிகரும், தொழிலாளரும் பல்வேறு நிலையினரும், நான்கு பேர் ஒன்று கூடும் அவை எதுவாயினும், பட்டி மன்ற முதல், பாராளும் மன்றம்வரை, உடற் பயிற்சிக்கூடம் முதல் ஊராட்சி மன்றம்வரை, இசையரங்காயினும், நாடகப் பேரவையாயினும் ஒவ்வோரிடத்திலும்—வள்ளுவர் விழா நிகழ வேண்டும்.

குடிசையிலும், மாளிகையிலும், திண்ணையிலும், தெருவிலும், பட்டிதொட்டிகளிலும், நாடு நகரங்களிலும், வள்ளுவர் விழா பொங்கலைப் போன்று—பொங்கிப் பூரிக்க வேண்டும்.

கொடியுயர்த்தல், தோரணங் கட்டல், அலங்கரித்தல், புத்தாடை உடுத்தல், ஊர்வலம் வருதல், விழாக் கூட்டம் நடத்தல் முதலிய பலவும் விழா நாளில் மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்தல், ஏழைகளின் பசி களைதல், உழவருக்குத் தொண்டாற்றல் முதலிய மன்பதைப் பணிகளும் விரும்பத்தக்கன.

குறளும் அருளும்

(புலவர் முருகவேள், B. O. L.)

முன்னுரை

திருக்குறளிற் பயின்றுவரும் 'அருள்' என்னும் சொல்லுக்கும், "அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன் அருளே பிறப்பறுப்பது......" "அருளது சத்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித் தெருள் சிவம் இல்லை......" 'உருவருள் குணங்களோடும் உணர்வருள் உருவிற்றோன்றும் கருமமும் அருள்....' என்றிங்ஙனம் சமயாசிரியர்களின் திருமொழிகளிற் பயின்றுவரும் 'அருள்' என்னும் சொல்லுக்கும் இடையே, ஒரு சிறிதளவு பொருள்வேறுபாடுண்மை, "குறளும் அருளும்" என்னும் பொருள் பற்றி ஆராயப்புகும் நமக்குத் தொடக்கத்திலேயே புலனாகாமற்போகாது. இவ்வேறுபாட்டுக்குக் காரணம், குறுகல் **(Restriction)** விரிதல் **(Expansion)** இடம் பெயர்தல் **(Transference)** சிறத்தல் **(Amelioration)** இழிதல் **(Deterioration)** என்பன போன்ற மொழிநூன் முறைகளுக்கேற்பச் சொற்கள் காலப்போக்கில் பொருள் வேறுபட்டு வழங்கத் தலைப்படுதலேயாம்

அநள் என்பது யாது?

'அருள்' என்பது யாது? "யாதானும் ஓர் உயிர் இடர்ப்படும் இடத்துத் தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரம் உடைமை" என ஆசிரியர் இளம்பூரணர் விளக்குவர். மணக்குடவர் தாமும் இங்ஙனமே கூறுவர்; பரிமேலழகரோ, "அன்பாவது தொடர்புடையார்கட் காதல் உடையனாதல்; அருளாவது தொடர்பு பற்றாது எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை" என்பர். புறநானூற்றுரைகாரரும் இதனையே தழீஇயுரைப்பர். பேராசிரியர் "ஓருயிர்க்கு இடர் வந்துழித் தன்னுயிரைக் கொடுத்துக் காத்தலும், அதன் வருத்தம் தனதாக வருந்துதலும் பொய்யாமை கள்ளாமை முதலியனவுமாம்" என்று தேற்றுவர்.

இங்ஙனம் உரையாசிரியர்கள் பலரும் 'அருள்' என்பது குறித்துச் செய்த விளக்கம், அவரவர் தத்தம் மனஞ் சென்றவாறு கூறிப் போந்ததன்று. ஆசிரியர் திருவள்ளுவர்தம் திருக்குறிப்பின் வழி நின்றே, அவர்கள் ஒவ்வொரு பெற்றியின்கண் வைத்து விளக்கியுள்ளனர். "மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்" என்னும் தொடரை இளம்பூரணரும், "அநள் என்னும் அன்பீன் குழவி" என்னும் தொடரைப் பரிமேலழகரும், 'பிறிதின் நோய்தன்நோய்போற்போற்றல்' "உயிர்க் குறுகண் செய்யாமை" என்பன முதலாகிய பல தொடர்களைப் பேராசிரியரும், அடிப்படையாகக் கொண்டே தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தனர் என்பது ஆய்ந்துணரற்பாலது!

திருவள்ளுவர் தரும் விளக்கம்

இனி இவைகள் ஒரு புறம் இருப்ப, ஆசிரியர் திருவள்ளுவனாரே தம் திருவாயால் 'அநள்' என்னும் சொல்லுக்குக் கூறும் விளக்கம் பிறிதோர் அதிகாரத்துள்ளது. "அருளல்லது யாதெனிற் கொல்லாமை கோறல், பொருளல்லது அவ்வூன் தினல்" என்னும் குறளில், "அருள்யாதெனிற் கொல்லாமை" என்றும் "அல்லது யாதெனிற் கோறல்" என்றும் அவர் விளக்கம் செய்திருத்தலைக் காணலாம். ஈங்கொன்று ஆழ்ந்து கருதி அறிதற்பாலதுளது. கொல்லாமையே அருளாவதெனின், "யாம் எவ்வுயிரையும் வாள்கொண்டு கொல்லுவதில்லை, பிறர் கொன்று தரும் ஊனை மட்டுமே தின்போம், எமது அருளுடைமை எத்துணைச் சிறந்தது!" எனச் சிலர் தம்மை வியந்து கொள்ளுவர் "செயிர்த் துலைப்பின் நெஞ்சுநோம் என்று தலை துமிப்பான் தண்ணளி" யைச் சார்ந்து நிற்குர் இவர்தம் அருளுடைமையினை விலக்குதற்கு, "பொருள்

குறள் நீர்

சாதி சமயப் பகை நீங்க கொள்கை உயர, அன்பு தழைக்க, அறம் ஓங்க, பண்பு வளர—திருக்குறள் நீர் மக்கள் உள்ளங்களிலெல்லாம் பாய்ச்சப்பட்டாக வேண்டும். 'கு.'

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1

அல்லது அவ்வூன் தினல்" என அடுத்து உடனே கூறி, அதனைப் பின்னும் எடுத்துத் "தினற் பொருட்டாற் கொல்லா துலகெனில்...." என்னும் குறளால், அவர்தம்மைக் கடிந்துரைப்பார். இவ்வாற்றால், "அருள்யாதெனிற் கொல்லாமை" என விளக்கிய ஆசிரியர்க்குக் "கொல்லாமை" என்பது யாதெனவும் விளக்கும் கடமை நேர்கின்றது. ஆயினும் "கொல்லாமை" என்பது யாதெனக் கிளந்து கூறாது, உய்த்துணர வைப்பாகக் குறிப்பிற் பெறப்பட வைக்கின்றார் நம் திருவள்ளுவர். அவர்தம் குறிப்பினை உய்த்துணர்ந்த பேராசிரியர், "உறுப்பறை குடிகோள் அலை கொலை" என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவுள், "கொலையாவது பிறர்தம் அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல்" என்றுரைப்பர். எனவே, வாளாற் கொல்லுதல் என்பதொன்றுமேயன்றிப் புறவகைக் கொலையுமுண்மை, பண்டையோர் கருத்தாதல் தெளியலாம். திருவள்ளுவர் செய்ந்நெறி மறந்தவனைச் "செய்ந்நன்றி கொன்ற மகன்" எனவும், அறிந்தார் அறிவை இகழ்ந்து கூறித் தானும் அறியாதவனை "அறிகொன்றறியான்" எனவும் கொலைப்பாற் படுத்துரைத்து, இக் கருத்தினைக் குறிப்பாற் புலப்படுத்தியிருத்தல் காண்க!

எனவே, "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணா செய்யாமை"யே கொல்லாமையாதல் உணரலாம். இக் கொல்லாமையாகிய அருளுடைமையே தலையாய அறம் என்பது திருவள்ளுவர் தரும் விளக்கமாகும்.

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்

ஆசிரியர் திருவள்ளுவர் உலகிற் றோன்றிய அருளாளர்கள் பலருள்ளும் தலைசிறந்தவர். அவரையொப்பத் திட்ப நுட்பமுறக் "காழில் கனி" எனலாம்படி, பலப்பல சிறந்த பொருள்களைத் தனித்தனியே எடுத்து எளிமையும் இனிமையும் தெளிவும் அமைய விளக்கியவர்கள் ஒரு சிலரே. மனிதன் பெறத்தக்க செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது அருட்செல்வமே; அதற்கிணையாய செல்வம் பிறிதொன்றில்லை என அவர் வலியுறுத்திக் கூறுகின்றார்! 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம், செல்வத்துள் எல்லாம் தலை" "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற" "கேடில் விழுச் செல்வம் கல்வி" எனத் திருவள்ளுவர் ஆங்காங்கு விதந்தோதியிருத்தல், எடுத்த பொருளினையே சிறப்பித்துரைத்தல் (பிரதிஞ்ஞா ஹேதுநியாயம்) ஆகவன்றோ உளதெனச் சிலர் எண்ணுக் கருதலாம். ஆயின், 'வெல்லும்சொல் இன்மையறிந்து' கூற வல்ல திருவள்ளுவர், பொருள்களையெல்லாம் ஒரு நிலைப்படப் பொது நோக்காகக் கூறிச் செல்லாது, 'வரிசையாக நோக்கி'யே கூறிச் செல்லும் இயல்பினர் என்பது, "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று" என்னும் குறள்கொண்டு உணரப்படும். எனவே, செவிச் செல்வம் மக்கட் செல்வம் கல்விச் செல்வம் என்பன தத்தம் இயல்பிற் சிறந்த செல்வங்களேயாயினும், அருட் செல்வத்தை நோக்க அத்துணைச் சிறந்தனவல்ல என்பதே திருவள்ளுவரின் முடிபுரையாம். அதனை விளக்குதற்கே, செவிச் செல்வம் மக்கட் செல்வம் கல்விச் செல்வம் முதலிய பலவற்றையும் சாதியொருமை பற்றிப் "பொருட் செல்வம்" என ஒரு தொகுதிப் படுத்து, அவை பலவும் "பூரியார் கண்ணும் உளவாம்" என அருட் செல்வத்தோடு அவற்றிடையுள தாம் வேற்றுமை தெரித்தோதி, "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்" என அதன் தனிப் பெருமாட்சிமையினை அழகுறத் தெருட்டினார்.

அருளே துணை

இத்தகைய அருட் செல்வமே நம்மனோர்க்கு வாழ்க்கையில் ஒப்புயர்வற்ற துணையாவதாகும். காட்சி கருதல் உரை உவமை ஒழிபு இன்மை உண்மை உலக வழக்கு முதலிய பல்திற அளவைகளானும், நுதலிய தறிதல் முதலிய உத்திகளானும் ஒருவன் எத்துணைதான் ஆராய்ந்து காணினும், அருளின் மிக்க பிறிதொரு துணை இல்லை எனக் குறள் துணிந்து கூறுகின்றது "பரிந்

குறள் மருந்து

தமிழ் இனத்தவரின் தனிப்பெரும் வழிகாட்டியும் தன்னிகரற்ற பெரும் புலவருமான திருவள்ளுவப் பெருந்தகையின் சீரிய கொள்கைகளும் சிறந்த கருத்துகளுமே, சீரிழந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தைத் தலைநிமிர்ந்து வாழச் செய்ய வல்ல மாமருந்து! அத்தகு பெருநெறி பரவ நமது முயற்சி என்ன? 'கு.'

Telegrams: "RAMBROS'

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை" என முன்னரும் கூறப்பட்டுளதே எனின், முற்கூறிய பொது விதியினும் பிற்கூறும் சிறப்புவிதி வலியுடைத்தென்பது அறிஞர் கோட்பாடாகலானும், அவ்வொழுக்கந்தானும் "பொய்தீர் வொழுக்க நெறி"யாய் அருளொழுக்கம் எனப்பட்டு அருளுடைமையின் கீழ்ப்போந்து ஒன்றிவிடுமாகலானும், அதனோடு இது மாறுபடாதென்பது. நெப்போலியன் படைத்துணைகள் பல படைத்திருந்தானாயினும், அருளடிப் படைகொண்ட உயர்ந்த குறிக்கோள் ஏதுமின்றிப் போர் செய்தமையே, பின்னாளில் அவன் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று என வரலாற்றறிஞர் அனைவரும் கருதுவர். (**Glimpses of World History-Jawaharlalnehru**) ஆதலின், பிற துணைகளினும் அருளுடைமையே தலை சிறந்த துணையெனத் தெளியலாம்.

அருளாள்வார்க்கு அல்லல் இல்லை

அருளுடையாராய்ப் பிற உயிர்களுக்கு நலமே செய்து வாழும் இயல்பினர்க்கு, ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒரு துன்பமும் கவலையும் உண்டாகாது; உண்டாகுமேனும் அவை அருளுடைமையாளை ஏதும் செய்யமாட்டாதொழியும்; "சாதலின் இன்னாத இல்லை" என்றபடி, மிக இன்னாமை வாய்ந்த இறப்புத்தானும் அவர்கட்கு இனிமையே பயப்பதாகும். சாக்ரதர், இயேசுநாதர் போன்ற அருளாளர்கள் இறப்பினையும் மகிழ்ந்தேற்றுக் கொண்டமை காணலாம். ஆதல் பற்றியே "அல்லல் அருளாள்வார்க்கில்லை வளி வழங்கும் மல்லன்மா ஞாலம் கரி" என்றார் திருவள்ளுவர். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியபோது, "நீங்கள் உங்கள் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப் படற்க! மக்கள் நலங்கருதி நீங்கள் உழைக்க முன் வந்தால், உங்கள் நலனைக் கருதித் துணை செய்ய மக்கள் அனைவரும் முன் வருவார்கள்! நீங்கள் ஒவ்வொருவர் மட்டுமே உங்களைக் காத்துக்கொள்ள முயல்வதைவிட, மக்களனைவரும் உங்களைக் காக்க முன்வருமாறு செய்து கொள்ளுவது நன்றல்லவா? எனக்கு உணவாக ஒரு சிறு கவளம் இருந்தாற் போதும்; ஆனால் நான் உண்பதற்காக எத்தனையோ உயர்ந்த உணவு வகைகள் காத்துக் கிடக்கின்றன! எங்கேனும் செல்வதற்காக ஒரு சிறு ஊர்திமட்டும் இருந்தாலே எனக்குப் போதும்; ஆயின் எனக்காக நூற்றுக்கணக்கான ஊர்திகள் எப்போதும் சமைவாக உள்ளன! இங்ஙனமே உங்களுக்கும் கிடைக்கும். நாட்டின் நலங்கருதி உழைக்க வாருங்கள்!" என்னும் கருத்தமைய ஆங்காங்குப் பேசிவந்தார். "மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கில்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை" என்ற உண்மையை வலியுறுத்த இதனினும் வலிய சான்று பிறிதொன்று வேண்டுங்கொல்? ஒரு சிறு வீட்டினை நடத்தமாட்டாமல் நாம் பெரிதும் கவலைப்படுகின்றோம். காந்தியடிகள் இவ்விந்தியப் பெருநாட்டினையே வழிகாட்டி நடத்தி வந்தார். அவர் எப்போதும் புன்முறுவல் பூத்த முகத்தினராய்ப் பொலிந்து, "இன்பமே 'எந்நாளும் துன்பமில்லை" என்ற நிலையில் வீண் கவலைகள் இன்றி, என்றும் மகிழ்மிக்கூர்ந்தே விளங்கினார். 'அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த இன்னா உலகம் (கவலை) புகல்" என்பது பொய்யாமொழியன்றோ?

அருளும் பொருளும்

இத்தகைய சிறந்த அருளியல்பின் மேன்மையினை, அஃதறியாதார்க்குத் தெருட்ட விரும்பிய திருவள்ளுவர், அவ்வறிவிலார் பெரிதெனமதிக்கும் பொருளொடு சார்த்தி வைத்து, அருளியல் மாண்பினை அறிவுறுத்துகின்றார். இங்ஙனம், ஒன்றனைப் பிறிதொன்றனோடு சார்த்தி வைத்து விளக்குவது, திருவள்ளுவரின் நூற்புணர்ப்பு முறைகளுள் ஒன்றாகும். கேள்வியினைச் 'செவிச் செல்வம்" என்றவர் அம்மட்டில் அமையாது, அதன் அருமை அறியாதார்க்கு அவர்கள் அறிந்து பெரிதும் விரும்பும் உணவொடு சார்த்தி, வயிற்றுக்குணவு போலச் செவிக்குணவும் உளதென்றும், செவிக்குணவாவது கேள்வி என்றும், கேள்வியாகிய செவிக்குணவு இல்லாதபோழ்தே சிறிது வயிற்றுக்கும்

திருவள்ளுவர் ஆண்டு 1985

பிரபவ விபவ வருஷப் பெயர் வரிசை ஏற்ற (60) ஆண்டுச் சுழலில் காலக் கணக்கை அறுதியிட்டுக் காணமுடியாது; அல்லற் பட்டுவரும் தமிழர் தமது பழம் பெருமைக்கு ஏற்பவேனும் தனியானதொரு ஆண்டுக் கணக்கை மேற் கொள்ளுவது இன்றியமையாததாகும். உலகத்தில் மதத்தலைவர் பேரரசர் பெயர்களால் பல்வேறு ஆண்டுக் கணக்குகள் நிலவுவதை அறிவோம் நாம். நமக்கென்று ஒரு காலக் கணக்கு இல்லாமலிருந்திருக்க முடியாது. எனினும் எவ்வாறோ இழந்துள்ளோம். குருடரைப் போன்று இடர்ப்படுகின்றோம். இழந்ததை மீட்க நமது வழிகாட்டியான வள்ளுவரின் காலத்தினை ஒட்டி ஆண்டுக் கணக்கிடுவதே வழியாகும். 'கு.'

ஈயப்படும் என்றும் கூறிக் கேள்விச் சிறப்பினை ஆசிரியர் விளக்கியிருத்தல் காண்க! "பொருளாட்சி போற்றாதார்க் கில்லை; அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின்பவர்க்கு" என்றதும் ஈண்டுக் கருதத் தகும். எனவே, அம்முறையின் வைத்து "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு" என்கின்றார் திருவள்ளுவர்! இதன்கண் "அவ்வுலகம்" "இவ்வுலகம்" என்பன வெறும் சுட்டுக்கள் அல்ல. அவ்வுலகத்திற்குத்தானே அருள் வேண்டும்! இவ்வுலகத்தில் எற்றுக்கு? எனச் சிலர் கருதுவாராதலின், அவர்க்குரிய விளக்கம் அத்தொடர்களில் உள்ளது. அவை முறையே "உயர்ந்ததாகிய அவ்வுலகம்" "இழிந்ததாகிய இவ்வுலகம்!" எனப் பொருளுணர்த்தும். இவ்வியல்பினைச் "சிறைவான் புலற்றில்லை" என்னும் பாடற்கண், "தில்லைச் சிற்றம்பலமாகிய நல்ல இடத்தும்" "என் நெஞ்சமாகிய தீய இடத்தும்" எனப் பேராசிரியர், திருக்கோவையாரிற் குறிப்புப் பொருள் விரித்துரைத்தமை போன்ற சான்றுகளால் தெளியலாம். "அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை...." என்னும் இக்குறள், அறிந்தது கொண்டு அறியாததனை விளக்கும் உவமையணியின் இலக்கணத்திற்கே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாவதோடு, திருவள்ளுவரின் உலகிய லறிவுக்கும் ஒரு சிறந்த இலச்சினையாகும், பிறரெல்லாம் நூலுட் பேசத் தகாதென எளிதாக ஒதுக்கிவிடும் "பெண்வழிச் சேறல்" பற்றி விளக்கிப் பேசிய திருவள்ளுவரின் உலகியலறிவுக்கும் எல்லையுண்டோ?

பொருளோடு சார்த்தி அருளியல்பினை விளக்கிய ஆசிரியர், அதனினின்று வேறுபடுத்தியும் அருளியல்பினை விளக்குகின்றார்! பொருளுக்கும் அருளுக்கும் இடையேயுள்ள வேற்றுமை மிகப் பெரிது. ஊழ்வயத்தாற் பொருளின்றி ஒருகால் வறியராயினார், பின்னொருகால் பொருள் செழிக்கவும் பெறுவர். அருளிழந்தவரோ அதனை மீண்டும் பெறுதல் அரிது. "பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார் அற்றார்மற்றாதல் அரிது" ஆகலின், "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்" வேண்டும் எனவும் திருவள்ளுவர் பணிப்பர்.

அருளாதான் செய்யும் அறம்

இனி, அங்ஙனம் கூறுவானேன்? அருளற்றாராயினும் பொருளை முதற்கண் தேடிக் கொண்டால், பொருள் தேடிக் கொண்ட பிறகு அறங்கள் பல செய்து அருளுடையாதல் ஒல்லாதோ? எனச் சிலர் கருதுவர். அறிவின் தெளிவு இல்லாதவன் மெய்ப்பொருளை ஒரு சிறிதும் உணர மாட்டான்; ஒரோவழி எங்ஙனமேனும் இடையே சிறிது உணர்ந்து கொண்டானாயினும், அறிவின் தெளிவின்மையால் அவன் அதனை மிக விரைவில் மறந்தொழிவான். அதுபோல அருளை யொழித்து முதற்கண் பொருள் தேடப் புக்கவன், பின்னொருஞான்றும் அப்பொருளைக் கொண்டு அறஞ் செய்து அருள் தேட முனையான். ஒரோவழி அறஞ்செய்யினும் தன் அருளின்மையால் தானே அழித்துவிடுவான் என்னும் கருத்தமைய, "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் அருளாதான் செய்யும் அறம்" என அவர்களின் ஐயத்தைத் தெளிவிக்கின்றது திருக்குறள்.

வலியார் முன் தன்னை நினைக்க

அற்றேல், பொருளற்றார் பூத்தல் போல அருளற்றார் அருளுடையாதற்கு யாதும் வழியே இல்லையோ எனின், பிற உயிர்கள் மாட்டு இரக்கம் செய்து பழகிவரின் நாம் அருளுடையராகலாம். நம்மினும் வலிமை மிக்கவர்கள் நம்மைத் துன்புறுத்தும்போது அவர்கள்பால் அடங்கிக் கிடந்து நாம் அலமரும் துன்ப நிலையை நினைவுகூர்ந்து, பிறிதின்நோய் தம்நோய் போல் போற்றி உயிர்க்குறுகண் செய்யாமல் உற்ற நோய் நோன்று வந்தால், நாம் அருளுடையராதல் கூடும் என, "வலியார்முன் தன்னை நினைக்க தான் தன்னின் மெலியார்மேற் செல்லும் இடத்து" என்னும் குறள் அறிவுறுத்துகின்றது. திருவள்ளுவர் ஏனையோர்போல வெறும்வாய்ச்சொல்வீரர் அல்லர். 'வாய்ச் சொற்கள் என்ன பயனுமில" என்பதனை நன்குணர்ந்த செயல் வீரர். ஆதலின் அவர் எதனைக் கூறினாலும் அது நடைமுறைக்கு வருமாறறிந்தே ஆராய்ந்து கூறும், இபல்வினர் நடைமுறைக்கு ஒவ்வாது வெறும் குறிக்கோள் அளவில் மட்டுமே நின்றொழிவனவற்றை அவர் யாண்டும் பேசிற்றிலர் "கற்க" என்ற அவர், கற்கும் முறை கற்பன என்பவற்றைக்

குறள் வழி

பழம்புகழ், புதுவாழ்வு அளிக்கும் படி செய்ய வள்ளுவர் வகுத்த வழி நடக்க வேண்டும். நாட்டு மக்களையும், ஊக்கத்தோடு அவ்வழி நடக்கச் செய்ய வேண்டும், 'கு.'

கூறியதோடு "நிற்க அதற்குத் தக" என்றும் வற்புறுத்துகின்றார்! இஃது அவர்க்கே யுரிய தனிப்பெருஞ் சிறப்பியற் பண்பு. அப் பண்பிற் கேற்ப, அருளின் சிறப்புக்களை மட்டுமே கூறியமைந்துவிடாமல், அதனை நடைமுறைக்குக் கொணரும் எளிய இனிய வழியினையும் கூறி, "அருளுடைமை" என்னும் அதிகாரத்தினை முடித்துள்ள திறம் மிகவும் பாராட்டற்குரியதாகும். "அன்பு" 'அருள்" என வாளா அழையாது அன்புடைமை அருளுடைமை எனத் தலைப்புக்களை ஆய்ந்த வேய்ந்தமையும் கருதற்குரியது.

முடிவுரை

இனி, திருவள்ளுவர் அருளினை "அந்தண்மை" எனவும் "செந்தண்மை" எனவும் திருக்குறளில் வழங்குவர். செந்தண்மை என்பதனை இக்காலத்தே சிலர் சீவகாருணியம் என்பர். இராமலிங்க அடிகளார்,

"வருமுயிர் இரக்கம்
பற்றியே, உலக
வழக்கில்என் மனம்சென்ற
தோறும்,
வெருவிநின் அடிக்கே
விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பம் செய்கின்றேன்
இன்றும்!
உருவஎன் உயிர்தான்
உயிர்இரக் கம்தான்
ஒன்றதே, இரண்டிலை!
இரக்கம்
ஒருவில்என் உயிரும்
ஒருவும் என் உள்ளத்
தொருவனே நின்பதத்
தாணை!"

என்னும் பாடலில், சீவகாருணியம் என்பதனை "உயிரிரக்கம்" என்பர். இங்ஙனம் அடிகள் குறித்த உயிரிரக்கம் என்னும் பொருளிலேயே திருவள்ளுவர் "அருள்" என்னும் சொல்லை வழங்கினாராயினும், நம் சமயாசிரியர்கள் இறைவன் செய்யும் தண்ணளியும் உயிர்களாகிய நம்மனோர்கள்பால் அவன் கொள்ளும் இரக்கமே யாகலின், உயிரிரக்கமாகிய அதனையும் "அருள்" எனவே குறித்தல் தகும் எனக் கருதி வழங்குவாராயினர். மேலும், உயிர்கள் மாட்டு அருள் செலுத்துபவனே இறைவன்பால் அருள்பெறத் தக்கவனாவான் என்னும் உண்மையை உணர்த்துதற்கும் சமயாசிரியர்கள் உயிரிரக்கம் குறித்த அருள் என்னும் சொல்லை இறைவனின் தண்ணளியைக் குறிக்க வழங்கினாராதல் கூடும். இரக்கம் உள்ளவர்கள் பேறு பெற்றவர்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்று விவிலியமும் கூறுகின்றதன்றோ! இதனால் அருளுடைமையின் சிறப்பு நனி விளங்கும். "அருளுடைமை என்னும் பண்பானது பிறர் வற்புறுத்த வருவதன்று. வானத்தினின்று தானே மழை பொழிவது போல, அருளுடைமையும் பிற உயிர்கள்பால் இயல்பாகத் தானே எழுவதாகும். தன்னைக்கொள்வான் கொடுப்பான் என்னும் இருவரையும் அஃது ஒருசேர வாழ்விக்கின்றது. ஆற்றலுள்ளெல்லாம் தலைசிறந்த போராற்றல் அருளாற்றலே. மன்னன் ஒருவனுக்கு அவனது மணிமுடியைவிட, அருளுடைமையே அழகும் சிறப்பும் அளிக்கின்றது. அரசனின் செங்கோல், அழிந்துபோகும் உலகியலாட்சியின் ஆற்றலைக் காட்டி, அருமையும் பெருமையும் விளைத்து, ஏனையோரை அஞ்சி நடுங்கவைக்கின்றது. அருளாற்றலோ, அங்ஙனமெல்லாம் இன்றி யாவர்க்கும் இனியதாய் அச் செங்கோலின் ஆற்றலையும் கீழ்ப்படுத்து, மேலோங்கித் திகழ்கின்றது. மாமன்னர்களின் மனத்தகத்தே அரியணையமர்ந்து வீற்றிருக்கத் தக்கதாக அருளுடைமை விளங்குகின்றது. இறைவனுக்குத் தனிப்பெருஞ் சிறப்பளிக்கும் பண்பாக அஃது இலங்குகின்றது" என ஆங்கிலப் பெருங்கவிஞராகிய சேக்குவீயரும் (Shakespeare) அருளுடைமையின் பெருமையினைச் சிறந்தெடுத்துப் பாடுவர். இறைவனுக்குத் தனிப்பெருஞ் சிறப்பளிக்கும் இவ்வருளுடைமைப் பண்பினையே அந்தண்மை எனத் திருக்குறள் குறிக்கின்றது. அறவாழி அந்தணன் எனத் திருக்குறள் இறைவனை வழங்கியதனை நினைந்தே மணிமொழியார் "அந்தணனாகி ஆண்டுகொண்டருளி, இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்" எனவும் "அந்தணனாவதும் காட்டிவந்தாண்டாய், ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே" எனவும் அருளிச் செய்வாராயினர். எனவே நாம் அனைவரும் திருக்குறளைக் கற்றுணர்ந்து, அஃது அறிவுறுத்தும் அருளுடைமையைக் கடைப்பிடித்து, "அந்தண்மை" என்னும் அரிய இறைநிலையை எய்திச் சிறந்து விளங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக!

செந்தண்மை என்னும்
சிறந்த அருளொழுக்கம்
அந்தண்மைத் தெய்வநிலை
ஆக்குவிக்கும்!—இந்தவுண்மை
மெய்யகத்தே தேர்ந்து,
மிகவும் கடைப்பிடித்து,
வையகத்து வாழ்வோம் மகிழ்ந்து!

—[O]—

திருவள்ளூர் மாதம் வைகாசி

தைத்திருநாளை வள்ளுவர் (விழா) நாளாகக் கொள்ளலாமென்றால், தைப் பொங்கலோடு முன்னும் பின்னும், அதை ஒட்டிய விழாக்கள் நிகழ்வதும், அவ் விழா ஒவ்வொரு குடும்பத்திலும் தனித்தனி கொண்டாடப்படுவதாக அமைவதும் பொதுமக்களைத் திரட்டி அறிவுரைகள் வழங்கத்தக்க ஒரு பெரு விழாவிற்கு ஏற்ற சூழ்நிலையாக அமையவில்லை. 'முத்தமிழ் விழா' 'தமிழர் திருநாள்' முதலான விழாக்களும் அதனுடன் இணைத்துக் கொண்டாடப்படுகின்றன. அவற்றுடன் வள்ளுவர் விழாவையும் இணைப்பது, அதை முழுப்பொலிவுடன் கொண்டாடவோ, பயன் மிகும்படி நடத்தவோ வாய்ப்பளிக்காது.

வைகாசித் திங்கள் விழா நிகழ்ச்சி கட்கேற்ற இளவேனிற் காலம்! வைகாசி கடைசி வாரம் திருக்குறள் விழா வாரம்; திருவள்ளுவர் திருநாள் வைகாசி அனுடம், என்னும் மரபுக்கும் இது, ஒத்து நிற்கும்; ஜூனின் முற்பகுதியில், இது, அமையுமாதலின், பள்ளிகள் கல்லூரிகட்கும் ஏற்றதாய் இருக்கும்; சில பள்ளிகள் அப்போது திறந்து விடுவர்; திருவள்ளுவர் விழாக் கொண்டாடிக் கிளர்ச்சியுடன் பாடசாலை மாணவர் தம் பள்ளி வாழ்க்கையில் முற்படலாம். கல்லூரிகட்கு அப்போது விடுமுறை இறுதியாயிருக்கும்; பலரும் திரண்டு விழாக் கொண்டாடிக்கொண்டு, அடுத்துக் கல்லூரி வாழ்வைத் தொடங்கலாம்.

மக்கள் விழா நாள்

திருவள்ளுவர் திருநாள், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற அடிப்படையில் மக்களை இணைந்து நிற்கத் தூண்டும் 'விழா' வாக அமையுமானால் அது வரவேற்கத்தக்கது, திருவள்ளுவர் திருநாள்-பொங்கல் நாளைப் போலவே—தமிழர் தேசியத் திருநாளாக-- மக்கள் விழா அமையும் தகுதி சான்றது.

திருவள்ளுவர் திருவிழா

உலகோர் உயர்வதற்கான, நல்வாழ்வின் அடிப்படையான, குறள் நெறியை, அறமுறையை, அன்பு வழியை, அருட்சிறப்பை இன்பத்தின் இலக்கணத்தை, ஒழுக்கத்தின் உயர்வை, வாய்மையின் பெருமையை, அறிவின் நலத்தை நாட்டாருக்கு எடுத்துரைத்தற்குரிய நன்னாளே அந்நாள்! மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும், கலை ஆர்வமும், கடமை உணர்ச்சியு , எல்லாவகையிலும் விடுதலை வேட்கையும், சமநிலை நோக்கமும் பூத்திடச் செய்தற்கான பொன்னாளே, அந்நாள்!

திருவள்ளுவரின் கருத்துக்கள், கைவிடப்பட்ட காரணத்தை, குறள் நெறி குலைய நேர்ந்ததை விளக்குவதோடு, திருக்குறள் ஆட்சியை நிலை நாட்டத் துணையாம் திருநாளே அந்நாள். திருக்குறளைப் பரப்பும் திருப்பணியை, வகுப்புகள் நடத்தும் முயற்சியை, இந்நாளில் ஊக்குவித்திருவதும் பெரும்பயனாகும்.

விழாவினை மேற்கொள்பவர்கள் ஆண்டுதோறும் விழா எடுக்கவும் உறுதி கொள்ளவேண்டும்.

விழாவில், வள்ளுவர் வாரத்தில் ஒரு நாளைக்கு விடுமுறையாக அளிக்க வேண்டுமெனவும், நீதி மன்றங்களிலும், சட்டசபைகளிலும் திருக்குறள் ஏட்டைக் கையிற் கொண்டு உறுதி மொழி எடுத்துக் கொள்வது முறையே என்று சட்டம் இயற்ற வேண்டுமெனவும் செய்தித்தாள்களும் கிழமை ஏடுகளும் பொதுமக்களும் வள்ளுவர் ஆண்டுக் கணக்கையே, வழக்காற்றில் கொள்ள வேண்டுமெனவும், கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

விழா நிகழ்ச்சி விவரங்களை—இயன்றவரை—எல்லா ஏடுகளுக்கும், அவற்றிற்கு ஏற்ற அளவில் பலமுறைகளில் அனுப்பவேண்டும்.

பொங்கல் விழாவைப்போல் எல்லாரும் உணர்ச்சிகொள்ளும் வகையில் வள்ளுவர் நாள் நாடெங்கும் கொண்டாடப்படும் நிலையினை விரைவில் தோற்றுவிக்கவேண்டும்!

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமையானும் கெடும்"—என்பது வள்ளுவர் வாய்மொழி. வாய்மொழியை மறக்கலாகாது.

வளர்க வள்ளுவர்புகழ்!
வேல்க குறள் நெறி! 'கு.'

'வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே"—

—கவிமணி தேசிகவிநாயகனார்

"வள்ளுவனார் வாய்மொழிபோன் மன்பதையா வும்பேணுந்
தெள்ளுமறை யொன்றுளதோ தேர்"

"மும்மை யுலகிற்கு முப்பாலை ஒப்பதொரு
செம்மைமறை யின்றுந் தெளி"

நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி.

—மனோன்மணீயம்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், கி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)